



ஜமாலியன் டைம்ஸ்
Since 1951
Show Us The Right Path
தமிழ் மாத இதழ்
இதழ் 7 சுற்று 8 JAMALIAN TIMES டிசம்பர், 2023




### செயலில் கவனத்தைச் செலுத்தும் போது ஏளனச் சொற்கள் நம் காதுகளில் விழாது.

# இலக்கை நோக்கியே நம் உள்ளம் செல்லும்

### உமறுப்புலவர் தமிழ்ப் பேரவை தொடக்க விழாவில் கவிஞர் யுகபாரதி பேச்சு














திருச்சி, டிச.28– திருச்சி ஜமால் முகமது கல்லூரி, முதுகலைத் தமிழாய்வுத்துறை சார்பாக உமறுப்புலவர் தமிழ்ப் பேரவை தொடக்க விழா வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அப்துல் கஃபூர் குளிர்மை அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வின் முதலாவதாக தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் இம்தாதுல்லாஹ் இறைகீதம் மொழிந்தார்.

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான சிராஜுதீன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் முகைதீன் விழாவிற்குத் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். அவரைத் தொடர்ந்து கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜாநஜீமுதீன், கல்லூரியின் பொருளாளர் ஹாஜி எம்.ஜே.ஜமால்முகமது வாழ்த்துரை நல்கினர். இவர்களைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி “அன்பும் அறனும்” எனும் தலைப்பில் உரையாற்றினார்.

அவர் பேசுகையில் அனைத்து மாணாக்கர்களும் சங்க இலக்கியப்பாடல்களைப் படிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். பெரும்பான்மையான சமகால திரைப்படங்கள் அனைவருக்கும் சமமான கல்வியை வழங்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தி வருகின்றன. எனவே அனைவரும் சமமான கல்வியை பயில வேண்டும் என்றார். செயலில் கவனத்தைச் செலுத்தும் போது ஏளனச் சொற்கள் நம் காதுகளில் விழாது. இலக்கை நோக்கியே நம் உள்ளம் செல்லும். எனவே இலக்கை மட்டுமே மாணவர்கள் உள்ளத்தில்கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் நிர்வாகக் குழுவின் மதிப்புறு இயக்குநர் அப்துல்காதர் நிஹால், துணை முதல்வர் ஜார்ஜ் அமல ரெத்தினம் தேர்வு நெறியாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான சையத்ஜாகீர்ஹசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக முதுகலை அரபுத்துறை இரண்டாமாண்டு மாணவர் யூ.பீர்முஹம்மது அஜாஸ் நன்றியுரை கூறினார். தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் விழா ஏற்பாட்டினைச் செய்தனர்.



ஆசிரியர் கல்வியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா


# ஆசிரியர்கள் முகமலர்ச்சியுடன் பழக வேண்டும்

**திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குனர் குணசேகரன் பேச்சு**




திருச்சி, டிச. 10– ஜமால் முகமது ஆசிரியர் கல்வியியல் கல்லூரியில் 12,13 மற்றும் 14வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி செயலாளரும், தாளாளருமான காஜா நஜீமுதின் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சந்திரகுமார் வரவேற்றார்.

விழாவில், திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குனர் குணசேகரன், சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார். அவர் பேசுகையில்,“ ஆசிரியரின் ஆளுமையே வகுப்பறைகளை மேன்மை அடையச் செய்கிறது. ஆசிரியர்கள் எப்பொழுதும், எந்தச் சூழ்நிலையிலும் மாணவர்களிடையே முகமலர்ச்சியுடன் பழக வேண்டும்”, என்றார். விழாவில், கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது, துணை செயலாளர் அப்துஸ் சமது, கவுரவ இயக்குனர் அப்துல் காதர் நிகால், இயக்குனர் (கல்வி சார்) ஜமால் முகமது ஜாபர், நிர்வாக அலுவலர் அர்மான் சாலிக் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.




## ANTI-DOWRY ASSOCIATION (WOMEN) IN ASSOCIATION





Anti-Dowry Association (Women) in association with Department of Arabic, Jamal Mohamed College organized an Exhibition on Quran, Hadiths & Science on 21.12.2023in Indoor Stadium of Jamal Mohamed College.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஹர்ஷமித்ரா மருத்துவமனை சார்பில்

# பிங்க் கிராஸ் சொசைட்டி தொடக்கம்




திருச்சி, டிச.23 – ஜமால் முகமது கல்லூரியில் ஹர்ஷமித்ரா மருத்துவமனை சார்பில் பிங்க் கிராஸ் சொசைட்டி தொடங்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாக புற்றுநோய் துறையில் மருத்துவத் தன்னிகரற்று செயல்பட்டு வரும் திருச்சி நாகமங்கலம் ஹர்ஷமித்ரா மருத்துவமனை, புற்றுநோய் சார்ந்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. அதன் ஒரு தொடர்ச்சியாக, மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் புற்றுநோயால் பாதிக்கப் பட்ட நோயாளிகளுக்கு உதவிகள் வழங்கிடுவதற்காகவும் பிங்க் கிராஸ் சொசைட்டி என்கின்ற ஒரு புதிய தன்னார்வல அமைப்பை தொடங்கியுள்ளது.

இந்த பிங்க் சொசைட்டி கிராஸ் என்கின்ற அமைப்பானது புற்று நோய்க்கு எதிரான போரில் மிகப்பெரிய பங்கை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பில் தன்னார்வலர்களாக இணைந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை புரிவதற்காக கல்லூரி மாணவ மாணவிகளையும், சமூக சேவகர்களையும் பிங்க் கிராஸ் சொசைட்டி வரவேற்கிறது. இதற்கான ஆரம்ப விழா ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் இந்த பிங்க் கிராஸ் சொசைட்டியின் முதல் படிவத்தினை வெளியிட்டு ஜமால் முகமது கல்லூரி மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார். இந்நிகழ்ச்சியில், ஜமால் முகமது கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முத்தீன், கல்லூரி பொருளாளர் முனைவர் ஹாஜி ஜமால் முஹம்மது, கல்லூரி துணைச் செயலாளர் அப்துல் சமது கல்லூரி கவுரவ இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிகால், மகளிர் கல்லூரி விடுதி இயக்குநர் ஹஜிரா ஃபாத்திமா. போதைப்பொருள் ஒழிப்பு இயக்கம் ஆலோசகர் முனைவர் முகம்மது இஸ்மாயில் ஹசைனி, ஷேக் இஸ்மாயில் மற்றும் அப்துல் ரஷீத் ஹசானி மற்றும் புற்றுநோய் இயக்குனர் ஹர்ஷமித்ரா மையத்தின் மருத்துவர் கோவிந்தராஜ்வர்தணன், மற்றும் இந்த பிங்க் கிராஸ் சொசைட்டியின் ஒருங்கிணைப்பாளர்கள் சிவா அருணாச்சலம் மற்றும் நற்றினை ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த பிங்க் கிராஸ் சொசைட்டியில் இணைந்து மக்களுக்கு தொண்டாற்றும் தன்னார்வலர்களுக்கு ஹர்ஷமித்ரா மருத்துவமனை சார்பில் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என ஹர்ஷமித்ரா மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்நிகழ்வை சங்க ஆலோசகர்கள் பேராசிரியர் முஹம்மது இஸ்மாயில் ஹஸனி, மற்றும் முனைவர் அப்துல் ரஷீத் ஹஸனி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.







P.G & Research Department of Mathematics, Jamal Mohamed College, Tiruchirappalli Mathematics Association and JMC Alumni Association (Singapore Chapter) jointly organized a Special Lecture on 20.12.2023.



ஜமால் முகமது கல்லூரி பெண்கள் பிரிவில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் பாரதியார் பிறந்தநாள் விழா (11.12.2023)




ஜமால் முகமது கல்லூரி – தமிழ் துறையில் (தன்னிதி ஆண்கள் பிரிவு) – பாரதியார் பிறந்த நாள் விழா (11.12.2023)



P.G & Research Department of Arabic (Aided) of Jamal Mohamed College conducted World Arabic Language Day Programme on 18 December 2023 (Monday)






The Rotaract Club (Men & Women) of Jamal Mohamed College and Post Office, JMC Branch jointly organized “Aadhaar Updation Camp” for the students and staff members of the college on 18.12.2023 & 19.12.2023. Around 205students and 10 staff members benefited through this camp.

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

**ஆசிரியர்**
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

**செய்தி ஆசிரியர்**
K. சண்முக வேலாயுதம்
M.A., M.Phil.,SET.,
துறைத் தலைவர் (காட்சித் தொடர்பியல் துறை)

**இணை ஆசிரியர்கள்**
D. பிரதீபன் M.Sc., SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

**ஆசிரியர் குழு**
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,

மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
T.M. கரண், R. வெற்றி கண்ணன்,

**நிருபர்கள்**
M. பாண்டியன், S. சுஜித்குமார் ,
R. அஸ்வந்த் கணேஷ் R.தீபக்குமார்

**ஒளிப்படக் கலைஞர்கள்**
K. அரவிந்த் குமார், A. வசந்த பிரியன்,
R.பாலசுப்ரமணியன், A. ரியாஸ்

**தொடர்புக்கு**
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

‘ஜமாலியன் டைம்ஸ்’ மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

சிறுதானிய உணவு ஆண்டு பேரணி

## சிகரம் தொடும் வாழ்வு தரும் சிறுதானியம்




திருச்சி. டிச.21: திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உணவு பாதுகாப்பு துறை சார்பில் சிறு தானிய உணவு ஆண்டை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சிறுதானியத்தை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் பிரதீப் குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் அனைவரும் சிறுதானிய உணவை உண்ண வேண்டும். வாரத்தில் இரண்டு நாட்களாவது கார்போ ஹைட்ரேட் உணவை தவிர்த்து சிறுதானிய உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். சிறுதானிய உணவை உட்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து உங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

சர்வதேச சிறுதானிய உணவு ஆண்டை முன்னிட்டு உணவு பாதுகாப்புதுறை சார்பாக நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணியில் சுமார் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு சிறுதானிய உணவே சிகரம் தொடும் வாழ்வைதரும்,சாமை சோறுக்கு ஆமை வயது, கேழ்வரகு உணவுக்கு உறவு – சாக்கரை நோய்க்கு எதிரி, வரகு உணவை உண்டால் வாழ்க்கை வரமே, கம்பு உடலுக்கு தெம்பு, சோள உணவே சோம்பலை நீக்கும், தினை உணவே இதயத்தின்துணை, தினை மாவைதின்று திடமான உடலை பெறுவீர், சாமை உணவுகளே சத்தான ஆதாரம்,சிறுதானிய உணவுகளே சிரமமற்ற வாழ்வை தரும்,குதிரைவாலி உணவை உண்டு குறைவற்ற நலன்பெறுவீர் மற்றும் ஒருமுறை பயன்படுத்திய சமையல் எண்ணெய்யை மீண்டும் பயன்படுத்தக்கூடாது எனும் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியவாறு மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து தொடங்கி நீதிமன்றம் ரவுண்டானாவரை இந்த பேரணி நடைபெற்றது. இப்பேரணியில்,மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் ரமேஷ் பாபு, உணவுபாதுகாப்பு அலுவலர்கள் பாண்டி, பொன்ராஜ், இப்ராஹிம், செல்வராஜ், மகாதேவன், கந்தவேல், அன்புச்செல்வன், வடிவேல், சண்முக சுந்தரம் மற்றும் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.




தேசிய மாசுக்கட்டுப்பாடு தினத்தையொட்டி

## விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி



திருச்சி, டிச.8– தேசிய மாசுக்கட்டுப்பாடு தினத்தையொட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் தண்ணீர் சுற்றுச்சூழல் மாணவர் மன்றமும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளரும், தாளாளருமான காஜாநஜீமுதீன், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டுதின் வாரியத் உதவிபொறியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் பொது மக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கியதுடன், மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து நெகிழ்ப்பொருட்களால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தீமைகள் குறித்து தண்ணீர் சுற்றுச்சூழல் மாணவர் மன்ற மாணவர்கள் டி.வி.எஸ்.டோல்கேட், சுப்பிரமணியபுரம், காஜாமலை, மன்னார்புரம், தலைமை தபால் நிலையம், ரெயில் நிலைய சந்திப்பு, மத்திய பஸ் நிலையம் ஆகிய பல்வேறு பகுதிகளுக்கு பல்வேறு குழுக்களாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களையும், மஞ்சள் பையையும் வழங்கினர்.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் சேக் இஸ்மாயில், மன்ற ஆலோசகர் செல்வராசு, மன்ற தலைவர் முகமது அனஸ், செயலாளர் முகமது கைப், பொருளாளர் முகமது ஷபீக், துணைத்தலைவர் இனாமுல்ஹஸன், துணை செயலாளர் முகமது தவுபீக் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## 8TH INTERNATIONAL CONFERENCE



8th International Conference on “Recent Advances in Chemical and Environmental Research” (ICRACER-2023) was held on 20.12.2023 at Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli, organized by PG and Research Department of Chemistry

கல்லூரிகளுக்கு இடையிலான குத்துச்சண்டை போட்டி

## சாம்பியன் பட்டத்தை வென்ற ஜமால்



திருச்சி,டிச.13:கல்லூரிகளுக்கு இடையே நடந்த குத்துச் சண்டை போட்டியில் ஜமால் முகமது கல்லூரி சாம்பியன் பட்டம் பெற்றது.

திருச்சி,தஞ்சை,புதுகை,நாகை, திருவாரூர்,பெரம்பலூர்,அரியலூர், மயிலாடுதுறை மற்றும் கரூர் ஆகிய 9 மாவட்டங்களில் கல்லூரிகளுக்கு இடையிலான மாணவர்களுக்கான குத்துச்சண்டை போட்டி புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

20 கல்லூரிகளிலிருந்து 150 மாணவர்கள பங்கேற்ற குத்துச்சண்டை போட்டியில் மாணவர்களுக்கு 13 பிரிவின் கீழ் நடைபெற்றன. 5 தங்க, 2 வெள்ளி பதக்கங்களை பெற்று திருச்சி, ஜமால் முகமது கல்லூரி முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டத்தை பெற்றது. 2 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கல பதக்கங்களை பெற்று இரண்டாவது இடத்தை புதுகை, மாமன்னர் கல்லூரியும், 2 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களை பெற்று மூன்றாவது இடத்தை திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியும் பிடித்தன.

ஆடை அலங்காரம் மற்றும் ஆடை வடிவமைப்பியல் துறை சார்பில்

## ஆடை அலங்காரம் குறித்த 2 நாள் பயிற்சி பட்டறை



திருச்சி,டிச.11– திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் ஆடை அலங்காரம் மற்றும் ஆடை வடிவமைப்பியல் துறையின் Fashion முதுகலை Illustration 05.12.2023 & 06.12.2023 அன்றுமதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை ஆண்கள் உடைகள் குறித்த இரண்டு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. திருச்சிராப்பள்ளியில் உள்ள ஜாஹிர்ஸ் பேஷன் ஹவுஸைச் சேர்ந்த ஃபேஷன் மேக்கர் திரு. ஜாஹிர் ஹுசைன் பட்டறையின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று 40 மாணவிகளுக்கு பயிற்சியளித்தார். இரண்டாம் ஆண்டு முதுகலை மாணவிகள் வரவேற்பு உரையுடன் அமர்வினை தொடங்கி வைத்தனர். முதல் நாளில், பயிற்சியாளர் ஆண்களின் கால் சட்டைகளின் வடிவத்தை உருவாக்கி, வடிவம் மற்றும் கட்டிங் செயல் முறையினை கற்றுக் கொடுத்தார் கால் சட்டையின் கட்டுமானப் பயிற்சியினை 2ம் நாள் பயிற்சியில் விளக்கப்பட்டது.



மண்டல அளவிலான ஹாக்கி போட்டியில்

## ஜமால் முகமது கல்லூரி 7–வது முறையாக சாம்பியன்




திருச்சி,டிசம்பர்.10–பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்ற திருச்சி, தஞ்சை மண்டலங்களுக்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையே மாணவர்களுக்கான ஹாக்கி போட்டி திருச்சி அண்ணா விளையாட்டரங்க செயற்கை புல்தரை மைதானத்தில் நடத்தப்பட்டது. திருச்சி ஜமால் முகமது கல்லூரியால் நடத்தப்பட்ட இப்போட்டியில் 8 கல்லூரி அணிகள் பங்கேற்றன.

இறுதிப்போட்டியில், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 5–1 என்ற கோல் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி வென்று, முதலிடம் பிடித்து, தொடர்ந்து 7வது ஆண்டாக சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டது.

புதுகை மாமன்னர் கல்லூரியை 2–0 என்ற கோல் கணக்கில் தஞ்சை பரத் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி வென்று, 3–வது இடம் பிடித்தது. பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், ஜமால் முகமது கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே.காஜாநஜீமுதீன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, முதல் 4 இடங்களைப் பிடித்த அணிகளுக்கு கேடயம், சான்றிதழ் வழங்கினார்.

நிகழ்ச்சியில், திருச்சி பாரதி தாசன் பல்கலைக்கழக உடற்கல்வித் துறை தலைவர் பேராசிரியர் ஆர்.காளிதாசன், கல்லூரி பொருளாளர் எம்.ஜெ.ஜமால் முகமது, துணை முதல்வர் ஜார்ஜ் அமல ரெத்தினம், உடற்கல்வி இயக்குநர் பி.எஸ்.ஷா இன்ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையே வாலிபால் போட்டி

## ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்








திருச்சி, டிச.6: திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளின் மண்டலங்களுக்கு இடையேயான வாலிபால் போட்டி திருச்சி, ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. திருச்சி மண்டலத்திலிருந்து ஜமால் முகமது, செயின்ட் ஜோசப் மற்றும் தஞ்சை மண்டலத்திலிருந்து. குடந்தை அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு கலை கல்லூரி ஆகிய 4 கல்லூரி அணிகள் லீக் போட்டியில் விளையாட தகுதி பெற்றன.

லீக்போட்டிகளில் திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரியை 25–20, 25–17, 25–13 என்ற புள்ளிகள் கணக்கிலும், குடந்தை, அரசு கலை கல்லூரியை 25–09. 25–11, 25–17 என்ற கணக்கிலும் , குடந்தை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 25–12, 25–18, 25–12 என்ற புள்ளிகள் கணக்கி லும் மூன்று போட்டிகளிலும் வென்று முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டம் பெற்றது.

திருச்சி, செயின்ட் ஜோசப் கல்லூரி, குடந்தை அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 25–20, 25–23, 25–13 என்று புள்ளிகள் கணக்கிலும், குடந்தை அரசு கலை கல்லூரியை 25–17, 25–16, 25–16 என்ற புள்ளிகள் கணக்கிலும் இரண்டு போட்டிகளில் வென்று இரண்டாவது இடம் பிடித்தது. குடந்தை அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு கலை கல்லூரியை 25–23,25–21,25–15 என்ற புள்ளிகள் கணக்கில் ஒரு போட்டியில் வென்று மூன்றாவது இடம் பிடித்தது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மாணவர் உடல் நல மையம், உதவும் இதயங்கள் அமைப்பு மற்றும் திருச்சி மெடிக்கல் சென்டர் மருத்துவமனை சார்பில்

## ஒருநாள் மருத்துவ முகாம்




திருச்சி, டிச.22– திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மாணவர் உடல் நல மையம், உதவும் இதயங்கள் அமைப்பு மற்றும் திருச்சி மெடிக்கல் சென்டர் மருத்துவமனை சார்பில் ஜமால் முகமது கல்லூரியில் மருத்துவ முகாம் நடந்தது. கல்லூரி செயலர் காஜா நஜீமுதீன் முகாமை துவக்கி வைத்தார். 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. மாணவர் உடல் நல மைய ஒருங்கிணைப்பாளர் ஜாகிர் உசைன் மற்றும் உதவும் இதயங்கள் அமைப்பின் பொறுப்பாளர் உமர் சாதிக் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

கல்லூரிகளுக்கு இடையில் மாணவர்களுக்கான பளு தூக்கும் போட்டி

## திருச்சி ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்




திருச்சி, டிச.1– திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக இனைவு பெற்ற திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகை, புதுகை ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளுக்கு இடையில் மாணவர்களுக்கான பளு தூக்கும் போட்டி திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. 9 கல்லூரிகளிலிருந்து 36 மாணவர்கள் பங்கேற்ற போட்டியில் மாணவர்களுக்கு 9 பிரிவின் கீழ் போட்டிகள் நடைபெற்றன.

இதில் 204 புள்ளிகளுடன் திருச்சி ஜமால் முகமது கல்லூரி ஒட்டு மொத்த அணி சாம்பியன் பட்டத்தை பெற்றது. 195 புள்ளிகளுடன் பாரதிதாசன் பல்கலைக்கழக துறைகள் அணி இரண்டாவது இடத்தையும், 148 புள்ளிகளுடன் மன்னார்குடி. மன்னை ராஜகோபாலசுவாமி அரசு கலை கல்லூரி மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

## STUDENTS' CORNER

# PHOTOGRAPHY



**V.Felix**

**2nd Year B.Sc Hotel Management & Catering Science**